கொண்டாட முடியாது என்றாலும் அவர்களுடைய தொழில் கருதி, வேறு இடத்தில் கடைகளைக் கட்டிக் கொடுக்க வாய்ப்புகள் இருந்தால், மாண்புமிகு உறுப்பினர் எடுத்துச் சொன்னதைப் போன்று மாநகராட்சித் தலைவரிடத்திலோ, அல்லது மாவட்ட ஆட்சித் தலைவரிடத்திலோ எடுத்துச் சொல்லி ஒரு குறிப்பிட்ட இடத்தை ஒதுக்கித் தர வாய்ப்பு இருக்குமானால், நாம் கேட்கலாம். அதுபற்றி ஆராயும்படியாகவும் சொல்லலாம்.

(ஈ) சேலத்தில் மருத்துவக் கல்லூரி தொடங்குதல்

*திரு. செ. செம்மலை: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே. ''சேலம் மருத்துவக் கல்லூரி தொடங்கப்பட்டும், அந்தக் கல்லூரி இன்னும் சேலத்தில் அமைக்கப்படாதது குறித்தும், அதை விரைவில் அங்கு அமைக்கப்பட வேண்டிய அவசியம் குறித்த'' அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

18–4–1984 அன்று மருத்துவத் துறைக்கான நிதி ஒதுக்கீட்டினை சட்டமன்றத்தில் தாக்கல் செய்த போது சேலத்தில் புதிதாக மருத்துவக் கல்லூரி ஒன்று துவக்கப்படும் என அப்போதைய நல்வாழ்வுத்துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள்.

2. சேலத்தில் நிலம் கையகப்படுத்தி, தக்க கட்டிடங்கள் கட்டி முடித்து அரசினர் மருத்துவக் கல்லூரியை அங்கு துவங்குவதற்கு நாட்கள் செல்லும். ஆகவே சேலத்தில் சேர்த்துக் கொள்ளப்படுவதற்காக 1985–86 ஆம் கல்வி ஆண்டு முதலாக 77 மாணவர்கள் எம்.பி.பி.எஸ். பட்டப் படிப்பிற்குத் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் சென்னை மருத்துவக் கல்லூரியிலும் (26 மாணவர்கள்), ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியிலும் (26 மாணவர்கள்), செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரியிலும் (25 மாணவர்கள்) சேர்க்கப்பட்டு கல்வி பயின்று வருகின்றனர். சேலத்தில் கல்லூரி செயல்பட ஆரம்பித்தவுடன் இந்த 77 மாணவர்கள் அங்கு மாற்றப்படுவார்கள்.

3. சேலத்தில் மருத்துவக் கல்லூரி ஏற்படுத்துவதற்காகவே மருத்துவக் கல்வி இயக்குநர் அலுவலகத்தில் ஒரு தனி அலுவலர் பதவி ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளது. இத்தனி

1987 ஏப்ரல் 24] [திரு. ப. உ. சண்முகம்]

அலுவலர் சேலத்தில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொண்டு வருகிறார். இவருக்குத் துணை புரிவதற்காக அலுவலகப் பணியாளர்கள் பதவிகளும் ஏற்படுத்தப்பட்டு நிரப்பப்பட்டுள்ளன.

4. சேலத்தில் மருத்துவக் கல்லூரி துவங்குவதற்கான இடத்தைத் தேர்வு செய்யும் பொருட்டு ஒரு குழு அமைக்கப்பட்டது. அக்குழு சில இடங்களை நேரில் சென்று ஆய்வு செய்து அரசுக்கு அறிக்கை அனுப்பியது. ஏற்காடு சாலையின் அருகில் உள்ள கொண்டப்பநாய்க்கனபட்டி என்ற இடத்தை அரசு தேர்வு செய்து, அந்நிலத்தை கையகப்படுத்தலாமென முதலில் முடிவு செய்தது.

5. சேலத்தில் கொண்டப்பநாய்க்கன்பட்டியில் மருத்துவக் கல்லூரி நிறுவுவதற்கான நிலத்தைக் கையகப்படுத்துவதற்காக சிறப்பு தாசில்தார் பதவியும் பிற பதவிகளும் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இவர்கள் நிலம் கையகப்படுத்தும் பணியைத் துரிதமாக மேற்கொண்டதன் பயனாக நிலம் கையகப்படுத்தும் சட்டத்தின் பிரிவு 4 (1)-ன் கீழ் நிலம் கையகப்படுத்துவதற்கான அறிவிப்புகள் வெளியிடப்பட்டுள்ளன.

6. இதற்கிடையே, கொண்டப்பநாய்க்கன்பட்டியில் உள்ள விவசாயிகள், அங்குள்ள நிலத்தைக் கல்லூரிக்காக எடுத்துக் கொண்டால், விவசாயம் பாதிக்கப்படும் என ஆட்சேபணை தெரிவித்து மாற்று நிலம் கையகப்படுத்துமாறு கோரினர். இது தொடர்பாக சேலம் மாவட்ட ஆட்சியரின் அறிக்கை கோரப்பட்டது. அவர் கொண்டப்பநாய்க்கன்பட்டியில் உள்ள நிலத்தைக் கையகப்படுத்துவதற்குப் பதிலாக சேலம் உருக்காலைக்கு வழங்கப்பட்டு அவர்கள் இன்னும் உபயோகப்படுத்தாமல் வைத்துள்ள பெருவாரியான நிலத்தை மைய அரசுக்கு எழுதி, அவர்களிடம் இருந்து நிலத்தை திரும்பப் பெற்று அங்கு மருத்துவக் கல்லூரியை நிறுவலாம் எனப் பரிந்துரைத்தார். இதனடிப்படையில் புது டில்லியிலுள்ள ஸ்டீல் அதாரிட்டிக்கு எழுதப்பட்டுள்ளது. அவர்கள் இவ்வரசு கேட்டுள்ள சுமார் 200 ஏக்கர் நிலத்தைத் தர ஒத்துக் கொள்வதைப் பொறுத்து மேல் நடவடிக்கை தொடர வேண்டியுள்ளது.

7. மேற்கூறிய நிலையில் சேலத்தில் நிலம் கையகப்படுத்தி கட்டிடங்கள் கட்டி முடித்து மருத்துவக் கல்லூரியை அங்கு ஆரம்பிக்க இன்னும் ஓரிரண்டு ஆண்டுக் காலமாவது ஆகலாமெனக் கொள்ளலாம்.

*திரு. செ. செம்மலை : மாண்புமிகு பேரவைத்துணைத்தலைவர் அவர்களே தாங்கள் கேட்ட ஒரு கேள்விக்குப் பதில்சொல்கின்ற போதும் என்னுடைய கவன ஈர்ப்புத் தீர்மானத்திற்கு மாண்புமிகு அமைச்சரவர்கள் அளித்திருக்கிற விவர அறிக்கையிலும் சேலததிலே அந்தக் கல்லூரியை கட்டுவதற்கான விரைவான நடவடிக்கையை இங்கே குறிப்பிட்டுக் காட்டியிருக்கிறார்கள். அதற்கு நன்றி. ஆரம்பிக்கப்பட்ட அந்த மருத்துவக் கல்லூரி சேலத்திலே விரைவிலே அமைக்கப்பட வேண்டுமென்று நான் விரும்புவதற்கும் வலியுறுத்துவதற்கும் காரணம் அப்படி அங்கே அமைக்கப்பட்டு அந்தப் பகுதி மக்களுக்கு அது கிடைத்தால் மருத்துவ வசதி நவீன மருத்துவக் கருவிகள் வசதி போன்ற வசதிகள் கிடைப்பதற்கான வாய்ப்புகள் எல்லாம் ஏற்படும் என்ற அந்த விருப்பத்தில் தான் வற்புறுத்தி வருகிறோம். கொண்டப்பநாய்க்கன்பட்டியிலே நிலம் கையகப் படுத்துவதற்கு 4 (1) நோட்டிபிகேஷன் வெளியிட்டிருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். அதே நேரத்தில் சேலம் ஸ்டீல் அதாரிட்டியிடம் சேலம் உருக்காலை கையகப்படுத்தியிருக்கிற நிலத்தைக் கேட்டிருப்பதாகவும் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு அமைச்சரவர்களிடமிருந்து ஒன்றைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன. ஸ்டீல் அதாரிட்டியினருக்கு எழுதிக் கேட்டிருப்பதாலே இந்த கொண்டப்பநாய்க்கன்பட்டி நிலம் கையகப்படுத்தும் பணிகள் விடப்பட்டு விட்டதா அல்லது தொடர்ந்து நடைபெற்று வருகிறதா என்பதை அறிய விரும்புகிறேன். காரணம் 'அரசனை நம்பி புருஷனை கைவிட்ட கதையாக சேலம் ஸ்டீல் அதாரிட்டி பின்னாலே மறுத்துவிட்டால் இப்போது நாம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுவிடும். அதையும் அமைச்சரவர்கள் தெளிவாக விளக்க வேண்டும்.

இன்னொன்று மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவர் அவர்கள் இப்படி திட்டப் பணிகள் ஏதாவது சில காரணங்களால் தடைப்பட்டிருக்குமானால் அந்தப் பணிகளைத் துரிதப்படுத்தி விரைவுபடுத்துவதற்கு Special Commissioner for Project-Co-ordination and Implementation என்று ஒரு தனி அதிகாரியை நியமித்திருக்கிறார்கள். இந்தப் பொறுப்பும் இந்தத் தனி அதிகாரியிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறதா?

மாண்புமிகு திரு. ப. உ. சண்முகம் : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே சேலம் மருத்துவக் கல்லூரி கொண்டப்ப நாய்க்கன்பட்டி நிலத்திலே முதலிலே அரசு ஆரம்பிக்க இருந்தது. ஆனால் சமீபத்திலே சேலத்திற்குச் சென்று வந்த முதலமைச்சரவர்கள் ஸ்டீல் பிளாண்டிற்குக் கொடுத்த இடத்திலேயே இதை நிர்மாணிக்கலாம் என்று கருத்துத் தெரிவித்ததற்கொப்ப ஸ்டீல் பிளாண்ட் அதாரிட்டியினரிடம் கேட்டு அவர்கள் அந்த நிலத்திற்கு ஒப்புதல் தந்து இருக்கிறார்கள். இது விஷயமாக 'Co-ordination Project Officer டில்லிக்குச் சென்று நேரில் ஆலோசித்து வந்திருக்கிறார். 4 (1) கீழ்போடப்பட்ட உத்தரவு வாபஸ் பெறப்படவில்லை.